# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2023

**ஆண்டு**: 8 **திகதி**: 25.11.2023

**நேரம்**: 2 மணித்தியாலங்கள்

**ஆசிரியர்** : திருமதி சத்தியதேவி பாலகங்காதரன்

**மாணவர் பெயர்**: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 20 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

## அன்னையர் தினம்

‘‘தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை,’’ என்பது ஔவையார் வாக்கு. தாய் என்பவள் தன் பிள்ளைகளுக்குச் சிறுவயது முதல் நல்ல குணங்களைக் கற்றுக்கொடுத்து அவர்களைக் கண்ணும் கருத்துமாக வளர்க்கிறாள். மேலும், அந்தக் குழந்தைகள் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தருபவர்களாக வளரவேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுகிறாள்.

உற்றார் உறவினர்களும், நண்பர்களும் ஒருவனின் இன்பத்தில் சேர்ந்து இருப்பார்கள். ஆனால், துன்பத்தில் அவனுக்குத் தோள் கொடுப்போர் ஒரு சிலரே. மாறாக, தாயானவள் தன் பிள்ளை துன்பப்படுவதைக் கண்டு எத்தகைய சந்தர்ப்பத்திலும் பொறுத்துக்கொள்ளமாட்டாள்.

‘‘கன்று அழுத குரல் கேட்டு, தாய்ப்பசு கதறும்,’’ என்று கூறுவார்கள். ஐந்தறிவுடைய ஜீவனுக்கே இத்தகைய கருணை உள்ளம் இருக்கும்போது, ஆறறிவுடைய மனிதனைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? எனவே, நாம் தாயின் அருமை பெருமைகளை நினைவுகொள்ள ஆண்டின் ஒரு நாளை அன்னையர் தினமாகக் கொண்டாடுகிறோம்.

1908ஆம் ஆண்டு, மே மாதம் 10ஆம் திகதி, மேற்கு அமெரிக்காவில் உள்ள ஃபிளடல்ஃபியாவில் முதன்முதலில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. அன்று தொடங்கிய அன்னையர் தினக் கொண்டாட்டம் நாளடைவில் உலகின் பல இடங்களுக்கும் பரவியது. இன்று பெரும்பாலான நாடுகளில் அன்னையருக்காகக் கொண்டாடப்படும் ஒரு தினமாக அது சிறப்புப் பெற்று விளங்குகிறது.

உலகம் முழுவதும் வாழும் மக்கள் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை, அன்னையர் தினமாகக் கொண்டாடுகிறார்கள். இன்றைய இயந்திர உலகில் நம் அன்னையிடம் பேசக்கூட நேரம் கிடைக்காத நிலை உருவாகிவிட்டது. அதை ஈடுசெய்யும் வகையில் அன்னையர் தினத்தின்போது எல்லோரும் தத்தம் அன்னையரின் சுயநலமற்ற சேவையை நினைத்துப் பார்க்க முடிகிறது.

அன்னை என்பவள் அன்பின் பிறப்பிடம். அன்பின் அடையாளம் வெள்ளை நிறம். அந்நிறம் தூய்மையைக் குறிப்பது அல்லவா? அதனால், மேலைநாடுகளில் வெள்ளைக் கார்னேஷன் மலரை அன்னையர் தினச் சிறப்பு மலராகக் கருதுகிறார்கள்.

‘‘அம்மா என்றழைக்காத உயிரில்லையே,
அம்மாவை வணங்காது உயர்வில்லையே!’’

இத்தகைய சிறப்புக்குரிய தாயின் அருமை பெருமைகளை நினைத்து, அன்னையர் தினத்தை ஆண்டுதோறும் மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) தாயானவள் மற்றவர்களிடமிருந்து எப்படி வேறுபடுகிறாள்?

2) ‘‘கன்று அழுத குரல் கேட்டு, தாய்ப்பசு கதறும்’’ என்னும் தொடர் எதை உணர்த்துகிறது?

3) அன்னையர் தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கம் என்ன?

4) மேலைநாடுகளில் அன்னையர் தினத்தன்று ஏன் வெள்ளை நிறக் கார்னேஷன் மலர் கொடுக்கப்படுகிறது?

5) நீர் அன்னையர் தினத்தை எப்படிக் கொண்டுடாடுவீர் என்பதை விளக்கி 20 சொற்களில் எழுதுக.

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**சுற்றுப்பயண விளம்பரம்**




பாலித் தீவின்
பாரம்பரியத்தைக்
காண வாருங்கள்!

**2 நாள்களுக்கும் 1 இரவுக்கும் கட்டணம் $350 மட்டுமே!**

- 5 நட்சத்திர விடுதி
- இருவழி விமானப் பயணச்சீட்டு
- கண்கவர் இடங்களுக்கு குளுகுளு பேருந்தில் சுற்றுலா
- காலைச் சிற்றுண்டி

**அனைத்தும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து தரப்படும்.**

அதிர்ஷ்டக் குலுக்கலில்
மயூரி காரை
வெல்லுங்கள்!



**பாலா பயண நிறுவனம்**
தொலைபேசி எண்: 9413100
தொலைப்பிரதி எண்: 1717188



**உங்கள் தேவையே எங்கள் சேவை!**

**இந்தச் சுற்றுப் பயணத்தை நீர் தேர்ந்தெடுத்தால் அதற்கான காரணங்கள் என்ன என்பதையும், அதனால் நீர் அடையும் பயன்களையும் 45 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

## கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

மருத்துவர் கூறிய செய்தியைக் கேட்டுத் திருமதி திலகா அதிர்ச்சி அடைந்தார். அவரின் மகன், விமலனின் இருதயத்தில் ஒரு துவாரம் உள்ளது. அதை ____________________ செய்து குணமாக்கலாம் என்ற செய்திதான் காரணம். தம் மகன் எப்போதும் ____________________ காணப்பட்டதற்கு அதுதான் காரணம் என்பதை அவர் அப்போதுதான் உணர்ந்தார்.

அதை எண்ணி அவர் கவலையுடன் ____________________ நடந்து கொண்டிருந்தார். ____________________ அவரின் தோழி பத்மா அவ்வழியாக வந்தார். அந்த மருத்துவமனையில் பத்மா ஓர் இருதய அறுவைச் சிகிச்சை ____________________ பணிபுரிகிறார் என்பது திருமதி திலகாவின் நினைவுக்கு வந்தது. அவர் உடனே தம் மகனின் நிலையைப்பற்றிப் பத்மாவிடம் கூறினார். அதற்கு பத்மா, ‘‘கவலைப்படாதே திலகா! இன்றைய ____________________ அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது. இக்கால மருத்துவர்கள் சிக்கலான ____________________ குணப்படுத்தி விடுகிறார்கள். ஆகவே, நீ தைரியமாக உன் மகனை அறுவைச் சிகிச்சைக்கு அனுப்பி வை,’’ என்றார்.

இரண்டு வாரங்களுக்குள் விமலனுக்கு அறுவைச் சிகிச்சை ____________________ நடந்து முடிந்தது. ஒரு மாதத்திற்குள் அவனது உடல் தேறியது. திருமதி திலகா மருத்துவத்துறையின் முன்னேற்றம் மக்களுக்கு எவ்வளவு ____________________ இருக்கிறது என்பதை அறிந்து கொண்டார். அவரது மகனும் விரைவில் மற்றப் பிள்ளைகளைப் போல ஓடியாடி விளையாட ஆரம்பித்தான். திருமதி திலகா மகன் குணமாகியதால் ____________________.

| | | | |
|---|---|---|---|
| அறுவைச் சிகிச்சை | சோர்வாக | பயனுள்ளதாக | அறிவியல் |
| மருத்துவமனையில் | நோய்களையும் | வெற்றிகரமாக | அப்போது |
| நிபுணராக | அகமகிழ்ந்தார் | மருத்துவத்துறை | நோயாளிகளை |

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**மூன்று வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

1. அருள் அதிகாலையில் எழுந்தான்.
   அவன் காலைக்கடன்களை முடித்தான்.
   அவன் பள்ளிக்குப் புறப்பட்டான்.

______________________________

______________________________

______________________________

2. வாணி நூல் நிலையத்திற்குச் சென்றாள்.
   அவள் ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினாள்.
   அவள் அதைப் படித்தாள்.

______________________________

______________________________

______________________________

3. அம்மா கடைக்குச் சென்றார்.
   அவர் பொருட்கள் வாங்கினார்.
   அவர் சுவையாகச் சமைத்தார்.

______________________________

______________________________

______________________________

4. வள்ளி அழகிய ஓவியங்களை வரைந்தாள்.
   அவள் அவற்றைக் கண்காட்சிக்கு வைத்தாள்.
   அவள் பல பரிசுகளைப் பெற்றாள்.

______________________________

______________________________

______________________________

5. நாங்கள் வீட்டை அலங்காரம் செய்தோம்.
   நாங்கள் வகை வகையான சிற்றுண்டிகளைச் செய்தோம்.
   நாங்கள் தீபாவளியை மகிழ்ச்சியாகக் கொண்டாடினோம்.

______________________________

______________________________

______________________________

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. நீங்கள் அண்மையில் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சென்றுவந்த சுற்றுலா ஒன்றைப்பற்றி உமது தோழன் / தோழிக்கு கடிதம் எழுதுக.

2. தமிழர்களது பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றிய ஒப்படை ஒன்றை செய்வதற்காக அது பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்காக உமது தாத்தாவுடனான ஓர் உரையாடலை எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

**கீழே உள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து எடுத்து 120 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தனிநாயகம் அடிகளார்
2. பள்ளியில் கொண்டாடிய அல்லது பார்த்த பல்கலாசார நாள்
3. முதியோர் பராமரிப்பு